மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 140/22 |
| பெயர் | : | கருப்பசாமி (PW 2) |
| த/பெ. | : | ஆழ்வார் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Perumalsamy is absent. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18 th day of January 2024

**முதல் விசாரணை**

1)நான் புதியம்புத்தூரில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா. 1 ஆழ்வார் என் அப்பா. எதிரி பெருமாள்சாமியை நான் பார்த்ததில்லை.

2)06.10.2019 அன்று இரவு 8 மணிக்கு என் அம்மா போன் செய்து என் அப்பாவை 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருப்பதாக சொன்னார். நான் உடனடியாக தூத்துக்கடி அரசு மருத்துவமனைக்க சென்றேன்.மறுநாள் சிகிச்சையில் இருந்த என் தகப்பனாரை போலீசார் விசாரித்த போது அவர் புதுப்பச்சேரி ரோட்டில் வேலை முடித்துவிட்டு டாஸ்மார்க் கடையில் மது அருந்திவிட்டு புதுப்பச்சேரி ரோட்டில் கனி நகர் அருகே சென்றபோது இரு சக்கர வாகனத்தில் வந்தவர் அவர் மீது மோதி விட்டார் என்று தெரிவித்தார்.

3) என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் இருக்கும் அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என் அப்பாவிற்கு வலது காலில் கட்டு போட்டிருந்தது.புகாரில் விபத்து ஏற்படுத்திய நபர் பெயர் பெருமாள் சாமி என்று குறிப்பிடப்பட்டிருந்தது.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து நடந்ததாக சொல்லப்படும் அன்று இரவில் 8 மணிக்கு என் அம்மா போனில் என்னிடம் தகவல் தெரிவித்தார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2) எதிரி பெருமாள்சாமியை நான் பார்த்ததில்லை.போலீசார் புகார் வாக்குமூலம் பதியும் போது தான் எதிரியின் பெயர் எனக்கு தெரியும்.நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் விபத்தை பற்றி தகவல் ஏதுவும் அறிந்தகொள்ளவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.அ .சா.1 என் அப்பா என்பதுதான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.